# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT, NAMAKKAL.

C.C. No.453/2022

P.W.2

| | | |
|---|---|---|
| பெயர் | : | சுரேஷ் |
| தந்தை பெயர் | : | நடராஜன் |
| கிராமம் | : | என்.புதுப்பட்டி, |
| வட்டம் | : | மோகனூர்,<br>நாமக்கல் மாவட்டம் |
| ஜாதி | : | |
| தொழில் | : | வீல் அலென்மெண்ட் |
| மதம் | : | |
| வயது | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 on the day of 02.11.2022

முதல் விசாரணை :–

நான் மேற்சொன்ன விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நாமக்கல் – சேலம் செல்லும் பைபாஸ் ரோட்டில் முதலைப்பட்டி புதூர் பைப்பாஸ் பஸ் நிறுத்தம் அருகே அம்மன் வீல் அலைன்மெண்ட் என்ற தொழில் நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 23.08.2020ம் தேதி மாலை சுமார் 06.30–7 மணிக்குள் நான் என்னுடைய ஒர்க்சாப்பில் இருந்தேன். எங்களுடைய ஒர்க்சாப்புக்கு எதிரே பைபாஸ் ரோட்டில் இருந்து சத்தம் கேட்டது. நான் போய் பார்த்த போது ஒருவர் அடிப்பட்டு கிடந்தார். அங்கு கூட்டமாக இருந்தது. ஆம்புலன்ஸ் மூலமாக நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். மறுநாள் அவர் இறந்துவிட்டதாக தகவல் தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம்

அளிக்காத காரணத்தினால் குறுக்கு விசாரணை கேள்வி கேட்பது போல் கேள்வி கேட்கப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.)

விபத்து சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும், ஆஜர் எதிரி அசோக் லேலண்ட் தோஸ்த் என்ற மினிலாரியை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து சாலையை கடக்க வந்த கந்தசாமி என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. தற்போது இந்த வழக்கிலிருந்து எதிரியை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –– இல்லை.